# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 03 வெள்ளிக்கிழமை [20-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 229


## பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றை நாளை நடத்த பொ. ஐ. மு. ஏற்பாடு

### கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

கொழும்பு, ஓச. 20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்று ஐந்தாவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும் வகையில் நாளை கொழும்பில் மாபெரும் ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியன நடத்தப்படவிருக்கின்றன.

சுகததாஸ ஸ்ரேடியத்தில் இருந்து ஆரம்பமாகி ஹவ்லக் மைதானத்தை அடையவிருக்கும் இந்த ஊர்வலத்தில் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டோர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஊர்வலம் செல்லும் பாதைகள் அன்றையதினம் போக்குவரத்துக்கு மூடப்படவிருப்பதாகப் பொலீஸார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

குழாய்க் கிணறு துப்புரவு செய்த:

## மாநகர சபை ஊழியர் விசாரிக்கப்பட்டு விடுவிப்பு

அரியாலைச் சந்தைக்கு சமீபமாக தூர்ந்து போயிருந்த குழாய்க் கிணறு ஒன்றை நேற்று துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த யாழ். மாநகர சபை ஊழியர்கள் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அந்தப்பகுதி மக்களின் வேண்டுகோளின் பேரில் இந்தக் கிணற்றை புனரமைக்கும் பணியில் மாநகர சபை ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர் என்ற விவரம் படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் —

அதன் உண்மைத் தன்மையை அறிந்து கொண்ட படையினர் அவர்களை விடுவித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# வவுனியாவின் பெரும் பகுதி இன்று இருளில் மூழ்கிறது!

## படையினரின் உத்தரவுக்கிணங்க மின்மாற்றிகள் அகற்றப்படுகின்றன

வவுனியா, ஒகஸ்ட் 20

வவுனியா மாவட்டத்தில் மின்மாற்றிகள் தகர்க்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதை அடுத்து—

நகருக்கு வெளியே அமைந்துள்ள 12 மின் மாற்றிகளை அவ்விடங்களில் இருந்து அகற்றும் பணி இன்று ஆரம்பமாக விருப்பதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக வவுனியாவின் பெரும் பகுதி இருளில் மூழ்கிறது. வவுனியாவில் 74 சத வீதமான பகுதியில் வாழும் 4 ஆயிரம் குடும்பங்கள் மின் விநியோகத்தை இழப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் மின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள 12 மின் மாற்றிகளையும் கழற்றி இராணுவ முகாமில் வைக்குமாறு மின்சார சபைக்கு வவுனியா நகர பிரிகேடியர் ஜயவர்த்தன நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவை அடுத்து அந்த மின்மாற்றிகளை கழற்றும் பணி இன்று ஆரம்பமாகும் என்று மின்சாரசபை அதிகாரி தெரிவித்தார்.

அதேநேரம் — இது விடயமாக வவுனியா இராணுவ முகாமில் இன்று கூட்டம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹட்டனில் மின்கோபுரம் தகர்ப்பு

கொழும்பு, ஓக. 20

ஹட்டன்— மல்லிஹப்புவப் பகுதியில் உள்ள மின்சார பரிமாற்றுக்கோபுரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் கோபுரம் பலத்த சேதமடைந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் குண்டு வீச்சு

பூநகரிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 12. 30 மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. (இ-31)



அப்ப கொழும்பில இப்ப மலிவான பொருள் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் தான் போல......!

## வெறும் காணியில் கிரனேட், மண்டை ஓட்டின் முகப் பகுதி

### அரியாலையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

அரியாலை மேற்கு நொத்தாரிஸ் வீதியில் உள்ள வெறுங் காணி ஒன்றில் இருந்து கிரனேட் ஒன்றும், மண்டை ஓட்டின் முகப்பகுதியும் நேற்று கண்டெடுக்கப்பட்டன.

இது தொடர்பாக அந்தப் பகுதி கிராம சேவையாளர் கொடுத்த தகவலின் பேரில் இராணுவத்தினரும், மனித உரிமை ஆணைக்குழுவினரும் அவற்றைப் பார்வையிட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் நடவடிக்கைக்கு தமிழ்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு!

வவுனியா, ஓக. 20

வவுனியா மாவட்டத்தின் புறநகர்ப் பகுதிகளில் மின்மாற்றிகளை அகற்றும் நடவடிக்கையை புளொட், ரெலோ அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

இந்த விடயமாக புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் இராணுவத் தளபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மின்மாற்றிகள் அகற்றப்படுவதால் அந்தப்பகுதி மக்கள் தமது சுயதொழில்களை இழப்பர் என்றும்—

அத்துடன் இருளில் மூழ்கும் அந்தப் பகுதியில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு என்றும்— தெரிவித்துள்ளார்.

எமது ஆயுதங்களை மீள ஒப்படைத்தால் மின்மாற்றி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டி வீரக்கோனுக்கு எதிராக ரணில் வழக்கு

கொழும்பு, ஓக.20

விஞ்ஞான, தொழில்நுட்பத் துறை அமைச்சர் பட்டி வீரக்கோனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பொதுசனத் தொடர்பு ஆலோசனை நிறுவனத்திடம் இருந்து தமக்கு அனுப்பப்பட்ட ''ஈமெயில்'' செய்தியை பட்டி வீரக்கோன் இடைமறித்து அறிந்துள்ளார் என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுகளைக் கண்டுபிடிக்க பயிற்சி பெற்ற நிபுணர் குழு

### கொழும்பில் இயங்குகிறது

கொழும்பு, ஓக. 20

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் குண்டுகளைக் கண்டு பிடிக்கும் பணியில் விசேட பயிற்சி பெற்ற நிபுணர் குழு ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரி. டபிள்யூ. டி. சில்வா தலைமையில் இயங்கும் 18 பேர் கொண்ட இந்தக்குழு சைக்கிளில் சென்று தகவல்களைத் திரட்டி வருகின்றது.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் ஆலோசனையின் பேரில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்கு ம.தி.மு.க. ஆதரவு

சென்னை. ஓக. 20

''ஈழத் தமிழர்களின் இன்னல்கள் தீர தனித் தமிழீழமே தீர்வு'' என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி நேற்று முன்தினம் சென்னையில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

தமிழகத்தில் வாழ்கின்ற ஈழத்தமிழ் அகதிகளின் நலன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகத்தில் சர்வமதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 20

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவும் மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாழவும் தெய்வ ஆசிவேண்டி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் சர்வமதப் பிரார்த்தனையின் இரண்டாவது வார நிகழ்வுகள் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்றைய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் இந்து சமயப்பிரார்த்தனையும் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வணக்கத்துக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 | 06 — 1946

மறைவு 12 | 08 — 1997

அமரர்

## வீரகத்தி சத்தியசீலன்

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
எமை பாதியிலே பரிதவிக்க விட்டு
விண்ணுலகுக்கு விரைந்து நீ சென்றாலும்
விலகாது நம் துயரம் நாம் உள்ளவரை!

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளை,
உறவினர்கள், அயலவர்கள்.

கண்டி றோட்,
தபால்கட்டை சந்தி,
அரியாலை.

(சி/8571)


**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று
சூர்யா - ஜோதிகா
வடிவேல் நடித்த
**பூவெல்லாம் கேட்டுப்பார்**
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(சி/8573)

**ராஜா**
யாழ்ப்பாணம்
பிரசாந்த் – ஐஸ்வர்யா
நாசர் நடித்த
**ஜீன்ஸ்**
10-30, 2-30
(புதிய நேரம்)
அடுத்த வெளியீடு
**பாண்டியன்**
(சி/8475)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
கார்த்திக், நக்மா,
கவுண்டமணி நடித்த
**மேட்டுக்குடி**
காட்சிகள் 11.00, 2.30
/ புதிய நேரம் /
(68341)


# பெருமளவு கிழங்கு சந்தையில்

யாழ்ப்பாணம், ஓக. 20.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மாகோ மற்றும் இந்துருவலி ஆகிய கப்பல்களில் பெருமளவு உருளைக்கிழங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த உருளைக்கிழங்கு கப்பலிலிருந்து இறக்கப்பட்டு தற்பொழுது யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துள்ளதால் 140 ரூபாவாக இருந்த ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை நேற்று 60 ரூபா முதல் 80 ரூபா வரை விற்கப்பட்டது.

தற்பொழுது சந்தைகள் மற்றும் கடைகளில் உருளைக் கிழங்கு தாராளமாக இருப்பதால் உருளைக்கிழங்கின் விலை மேலும் வீழ்ச்சியடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாகோ கப்பலில் ஒன்பது லட்சம் லீற்றர் தேங்காய் எண்ணெயும், இந்துருவலி கப்பலில் கட்டட கூட்டுத்தாபனத்துக்கு 40 ஆயிரம் பைக்கெட் சிமெந்தும், மாக்பெட் நிறுவனத்துக்கு உணவுப் பொருள்களும் மற்றும் உர வகைகளும், விதை நெல்லும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-5-9-ரி)

## உதைபந்தாட்டம்

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'தூயஒளி' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டத்தில் பாடும்மீன் வி. க. ஏ அணியை எதிர்த்து சென். நீக்கலஸ் அணி மோதும்.

## யோகர் நினைவு

யாழ்.சிவதொண்டர் நிலையத்தின் ஏற்பாட்டில் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை நூலின் உரை விளக்கம் இன்று முதல் தினமும் காலை 9-00 மணி தொடக்கம் நிலையத்தில் நடைபெறும். (இ-3)

# கண்ணீர் அஞ்சலி

யா/ நாவற்குழி மகா வித்தியாலய
தரம் 10A மாணவன்

## செல்வன் குலேந்திரன் மேகலன்

அவர்களின் திடீர் மறைவையொட்டி அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடையும் அதேநேரம் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ நாவற்குழி ம. வி.

(68345)


# புதிய வெளியீடுகள் விற்பனையாகின்றன

- தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்
  டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை
  விலை ரூபா 150.00
- G.C.E. O/L -- A/L
  விவசாய விஞ்ஞானம் பகுதி I — விலை ரூபா 150.00
  விவசாய விஞ்ஞானம் பகுதி II — விலை ரூபா 175.00
  (பயிராக்கவியல்)

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2573
(சி/8570)


# ஓராண்டு நினைவஞ்சலி



மறைவு 01 — 08 — 1998

திதி 20 — 08 — 1999

அமரர்

## வேலுப்பிள்ளை செல்லத்துரை

(பிரபல சோதிடர்)

— எம் தந்தை —

பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, இறப்பு
இவையனைத்தும் இயற்கை நியதி
பொறுப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
இவையனைத்தும் நன்மனிதர் இயல்பு
அன்பு, கருணை, ஈய்வு, இரக்கம்
இவையனைத்தும் பெரியோர் இயல்பு
இறப்பு இறுதியில் கை கொடுக்குமோர் வடிவம்–அது
இவையனைத்திற்குமென்றும் அவரவர் இயல்பாம்.
பாரெங்கும் போற்ற
பாங்குடனே எமை வளர்த்து
சீரெல்லாம் எமக்களித்து
சிறப்புற எமை வளர்த்து
ஊரவர் உற்றார்கள் உமைவணங்கி காத்திருக்க
சீராக சிறப்பாக நீர் சேர்ந்து
ஓராண்டு கழித்தீரோ
ஓராயிரம் ஆண்டு சென்றிடினும்
உமது எண்ணம் நீங்காதையா
எம் மனதில்.

கலாநிதி செ. ஆனந்தவரதன்
(மகன்– லண்டன்)


கடந்தவருடம் 1–8–98 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை (பிரபல ஜோதிடர்) அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (20–8–99) வெள்ளி முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

செ. ஜெயசோதிவரதன் (வரதன் மாஸ்ரர்),
''ஜெய் ஆனந்த வாசகம்'',
இணுவில் தெற்கு,
இணுவில்.

(சி/8572)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்

## சிதம்பரப்பிள்ளை கணேசலிங்கம்

மலர்வு: 1961–07–29
உதிர்வு: 1998–06–02

## திருமதி நேசம்மா சிதம்பரப்பிள்ளை

மலர்வு: 1931–03–22
உதிர்வு: 1998–08-01

ஓர் ஆண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு என்றும் அகலாது. எங்கள் அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், மாமன்மார்,
மைத்துனர்கள்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

75/2 கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(68337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெல்லாரி தொகுதியிலேயே சோனியா காந்தி போட்டி!

## இறுதி நேரத்தில் மனு தாக்கல்

புதுடில்லி, ஓக. 20

நடைபெறவுள்ள இந்திய பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி கர்நாடக மாநிலத்தின் பெல்லாரி தொகுதியில் போட்டியிட உள்ளார்.

வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாளான நேற்று முன்தினம் இறுதி நேரத்தில் சோனியா காந்தி தனது வேட்பு மனுவை பெல்லாரி தொகுதியில் தாக்கல் செய்தார்.

இந்தத் தொகுதியில் சோனியா காந்தியை எதிர்த்துப் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சுஷ்மா சுவராஜ் போட்டியிட உள்ளார்.

சோனியா காந்தி போட்டியிடும் தொகுதி குறித்து காங்கிரஸ் இறுதி வரை இரகசியம் காத்து வந்தது.

உத்திரப் பிரதேசத்தின் அமெதி தொகுதி, ஆந்திராவின் கடப்பார் தொகுதி, கர்நாடகாவின் பெல்லாரி தொகுதி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில அவர் போட்டியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் ஹைதராபாத்துக்கு விஜயம் செய்த சோனியா மற்றும் காங்கிரஸ் பொதுச் செயலர் குலாம் நபி ஆஸாத் ஆகியோர் கடப்பார் தொகுதியிலேயே வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படும் என்ற சாரப்பட கருத்துத் தெரிவித்திருந்தனர்.

எனினும் இறுதி நேரத்தில் பெல்லாரி தொகுதியிலேயே வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

[ஐ-6]

## கார்கிலில் நேரடிப் பங்கு; பாக். ஒப்புக்கொண்டது

### இந்தியா கூறுகிறது

இந்தியா — பாகிஸ்தான் எல்லைப்புற நகரான கார்கில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சண்டையின் போது பாகிஸ்தான் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதை பாகிஸ்தான் அரசு வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளது என இந்தியா தெரிவிக்கின்றது.

பாகிஸ்தான் நாட்டின் உயர் இராணுவ விருதான நிஷனே கைதர் விருது கப்டன் கர்னாசேகருக்கு மரணத்துக்கு பின்னைய விருதாக வழங்கப்பட்டுள்ளது. கப்டன் கர்னா சேகரின் உடல் இந்தியாவினால் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்பட்டது.

மற்றும் —

இந்தியப் பிரதேசத்துக்குள் இந்தியாவுக்குச் சொந்தமான எம். ஐ. 17 ரக ஹெலிக்கொப்டரைச் சுட்டு வீழ்த்தியதற்காக இரண்டு விமானப் படை அதிகாரிகளை பாகிஸ்தான் அரசு கௌரவித்துள்ளது.

இந்த இரு சம்பவங்களுமே கார்கில் யுத்தத்தின் போது பாகிஸ்தான் படைகள் ஈடுபட்டிருந்தமைக்கு சான்றாகும் என்று இந்தியா மேலும் தெரிவித்தது. (இ-க)

## எதற்கும் எல்லை உண்டு; பாகிஸ்தான் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஓக. 20

எதற்கும் எல்லையுண்டு என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

பாகிஸ்தான் சுதந்திர தினத்தை முன்னிட்டு இஸ்லாமாபாத்தில் நாடாளுமன்ற வளாகத்துக்கு எதிரே அந்த நாட்டின் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அவர் உரையாற்றினார், ஆயிரக்கணக்கான பொது மக்களும் வெளிநாட்டுப் பிரமுகர்களும் அங்கு குழுமியிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் நவாஸ் ஷெரீப் பேசியதாவது:

பாகிஸ்தானின் கடற்படை அட்லாண்டிக் விமானத்தை எவ்விதக் காரணமும் இல்லாமல் இந்தியா சுட்டுவீழ்த்தி விட்டது. இதிலிருந்து யார் அமைதியை விரும்புகின்றனர், யார் அமைதியைக் குலைக்க முற்படுகின்றனர் என்பதை உலகநாடுகள் அறியலாம்.

எதற்கும் ஓர் எல்லையுண்டு என்பதை இந்தியாவுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

கார்கில் சண்டையிலும் பாகிஸ்தான் கடற்படை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்திலும் பாகிஸ்தான் அரசு கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டுள்ளது. இதைப் பாகிஸ்தானின் பலவீனம் என்று கருதிவிடக் கூடாது. இப்பிராந்தியத்தில் போரைத் திணிக்க பாகிஸ்தான் விரும்பவில்லை. அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால் வெற்றியைக் கொண்டாட எவரும் உயிருடன் இருக்க முடியாது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் மூண்டால் அணு ஆயுதங்களைப் பிரயோகிக்கும் சாத்தியக்கூறுகளை மறுக்க இயலாது.

பாகிஸ்தான் மீது போரைத் திணிக்க இந்தியா முயலுமானால் தக்க பதிலடி கொடுப்போம். இதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை — என்றார்.

## ஜெய்பால் ரெட்டி காங்கிரஸில் இணைந்தார்

புதுடில்லி, ஓக. 20

ஜனதாதள் தலைவர்களில் ஒருவரும் இந்திய முன்னாள் மத்திய அமைச்சருமான ஜெய்பால் ரெட்டி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்.

ஜனதாதள் கட்சியின் சமயசார்பற்ற குழுவின் தலைவர் தேவகௌடாவுக்குத் தமது இராஜினாமாக் கடிதத்தை ஏற்கனவே அனுப்பி விட்டதாக ஜெயபால் ரெட்டி தெரிவித்தார்.

சமயவாதம் என்பது ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட மிகப் பெரிய சவால் இந்தத் தருணத்தில் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளே இருந்தோ வெளியில இருந்தோ ஆதரவளிப்பது அத்தியாவசியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

பொருத்தமான மூன்றாவது முன்னணி ஒன்று ஏற்படுவதற்கான உடனடி வாய்ப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. ஆதரவளிக்கும் ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து காங்கிரஸ் அந்த இடத்தை நிரப்பும் என்றும் அவர் மேலும் கூறினார்.

[ஐ—6]

## வடக்கு மாநிலம் ஒன்றிலும் சோனியா போட்டியிடுவார்

புதுடில்லி, ஓக. 20

இந்தியாவின் வடபகுதி மாநிலம் ஒன்றில் இருந்தும் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் —

அது எந்தத் தொகுதி என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் —

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பெல்லாரி தொகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

திருமதி சோனியா உத்திரப் பிரதேசத்தின் அமெதி தொகுதியில் போட்டியிடக் கூடுமென்று காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான கே. நட்வர்சிங் தெரிவித்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்றது முதல் நேரு குடும்பத்தினர் பாரம்பரியமாக அமெதி தொகுதியிலேயே போட்டியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-6)

உலக அரங்கில்

## இந்த நூற்றாண்டின் சிறந்த ஆசியர்கள்

புதுடில்லி, ஓக 20

அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் இந்திய விடுதலையைப்பெற்றுத்தந்த மகாத்மா காந்தி, ஆசியாவிலேயே முதன் முதலாக நோபல் பரிசை வென்ற மகாகவி ரவீந்திரநாத் தாகூர், இந்தியாவில் பசுமைப் புரட்சியின் தந்தை எனப்புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ் சுவாமிநாதன் ஆகியோர் இந்த நூற்றாண்டின் சிறந்த ஆசியர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் கணிப்பை அமெரிக்காவின் 'டைம்' இதழ் வெளியிட்டுள்ளது.

திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா, நவீன சீனாவின் சிற்பி எனப் புகழப்படும் சன்யாட் சென், சீனாவில் சோஷலிசப் புரட்சியை நடத்தி வெற்றி கண்ட மாஓசேதுங் அந்த நாட்டின் டெங்சியாவே பிங், பிரெஞ்சுக் காலனியாதிக்கத்தையும் அதன் பின்னர் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பையும் எதிர்த்து வியட்நாமின் விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை ஏற்று நடத்திய ஹோ சிமின் ஆகியோரும் இந்த நூற்றாண்டின் சிறந்த தலைவர்கள் என டைம் இதழ் குறிப்பிட்டுள்ளது.

உலகப் புகழ் பெற்ற ஜப்பானியத் திரைப்பட இயக்குநர் ஆகிரா குரோசாவா, சோனி நிறுவனத்தைத் தொடங்கிய அகியோ மோரிடா, டோயோடா கார் நிறுவனத்தைத் தொடங்கிய ஈஜிடோயோடா, ஜப்பானிய மன்னர் ஹிரோஹிடா ஆகியோரும் சிறந்த மனிதர்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

கம்போடியாவில் 20 லட்சம் மக்களைக் கொன்று குவித்த கெமரூச் இயக்கத்தின் தலைவர் பொல்பொட்டும் இந்த நூற்றாண்டின் செல்வாக்கு மிக்க தலைவர் என்று டைம் நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

[இ-8]

## ராடர் தளம் மீது தாக்குதல்

வட ஈராக்கின் இராணுவ இலக்குகள் மீது நேற்று முன்தினம் அமெரிக்க விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியபோது பாக்தாத்துக்கு வடக்கே 400 மீற்றர் தூரத்தில் உள்ள ஈராக்கிய ராடர் தளம் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கின் வான் பறப்புக்குத் தடை விதிக்கப்பட்ட பிரதேசத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானத்தின்மீது ஈராக்கியப் படைகள் தாக்குதல்களை நடத்தியதை அடுத்தே பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

(இ-8)

### தேர்தல் பிரசாரத்தின் போது

## வாஜ்பாயுடன் விமானத்தில் செய்தியாளர் செல்ல முடியாது

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தேர்தல் சுற்றுப் பிரயாணம் மேற்கொள்ளும் போது அவர் பயணம் செய்யும் விமானத்தில் செய்தியாளர்கள் எவரையும் அழைத்துச் செல்லக் கூடாது என்று தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.

வாஜ்பாய் தனது தேர்தல் சுற்றுப் பிரயாணத்துக்காக இந்திய விமானப்படை விமானங்களை உபயோகிப்பார். எனவே அவற்றில் செய்தியாளர்களை அழைத்துச் செல்வது நேர்மையானது அல்ல. செய்தியாளர்கள் பணம் கொடுத்தாலும் அவர்களை அழைத்துச் செல்ல முடியாது என்று தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யுமாறு பாரதீய ஜனதாக்கட்சி தேர்தல் ஆணையகத்திடம் கோரவுள்ளது.

பிரதமரின் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு விமானப்படையினரின் விமானங்களுடன் வேறு விமானங்கள் பயணம் செய்ய முடியாது. எனவே விமானப் படை விமானத்தில் பிரதமர் பயணம் செய்யும்போது செய்தியாளர்களை உடன் செல்ல அனுமதிக்காவிட்டால் தேர்தல் காலத்தில் உரிய விளம்பரம் கிடைக்காது என்று பாரதீய ஜனதாக்கட்சி தெரிவித்துள்ளது.

ஏனைய தலைவர்கள் விமானங்களை வாடகைக்கு அமர்த்தி தங்கள் தேர்தல் பிரசாரங்களுக்கு செய்தியாளர்களை உடன் அழைத்துச் செல்ல தேர்தல் ஆணையகம் அனுமதி அளித்துள்ளது.

தேர்தல் ஆணையகத்தின் இந்த உத்தரவால் வாஜ்பாயின் பிரசாரப் பணியில் சில தடங்கல்கள் ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது. (ஐ-6)

## பலியானோர் 4 ஆயிரம்

துருக்கியில் கடந்த செவ்வாயன்று ஏற்பட்ட பெரும் பூகம்பத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

20 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இறந்தவர்களதும், காயமடைந்தவர்களதும் எண்ணிக்கை இன்னும் அதிகமாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

நில நடுக்கத்தை அடுத்து ஆயிரக்கணக்கான பொது மக்கள் திறந்த வெளிகளில் இரவு நேரங்களில் தங்கி வருகின்றனர். (ஐ-6)


உ

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் ஆவணி மாதம் 5 ஆம் நாள் (22-08-99) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிமுதல 10-35 மணி வரையுள்ள சுப வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

**தனுஜா (சூட்டி)** அவர்களுக்கு

பூப்புனித நீராட்டி ருதுசாந்தி செய்ய இறையருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
ஆ. தவயோகராசா தம்பதிகள்

46, பெரியதம்பிரான் வீதி,
வண்-வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

துளசிகா களஞ்சியம் (நகைக் கடை)
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தனேந்திரன் நீலாதேவி என்பவரது தேசிய அடையாளஅட்டை [576053253V], விசேட அடையாள அட்டை, தனேந்திரன் துரிதா என்பவரது விசேட அடையாள அட்டை [0901007603] என்பன யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சரவணா அச்சகம், ஆஸ்பத்திரி வீதி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [68328]

காரியாலய திறப்புக்களும், சைக்கிள் திறப்பும் மகளிரின் கைப்பேர்சுடன் 2 ஆம் குறுக்குத் தெருவுக்கும் யாழ். பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 100, பிரதான வீதியில் அமைந்த வடமாகாண கடற்றொழிலாளர் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [68327]

சிவதாஸ் விஜயா என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டைகளும் [648492910V, 0902031439] வரதராசா சந்திரா என்பவரது விசேட அடையாள அட்டையும் [0902033283[ சுழிபுரத்துக்கும் வழக்கம்பரைக்கும் இடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குமாரசாமி சிவதாஸ் கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். [68326]

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 41 வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் - 929, மே / பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [68253]

## 'உ' அட்டைக்கு அரிசி விநியோகம்

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 'உ' பங்கீட்டு அட்டைக்கு 10 கிலோ குத்தரிசி கிலோ 31 ரூபா விலைக்கு வழங்கப்படுகிறது. 25 ஆம் திகதிக்கு முன்பு தமது பங்கீடுகளைப் பெற்றுக் கொள்ளும்படி பாவனையாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். [ஐ-154]

### கடை வாடகைக்கு

றக்கா வீதியில் (I. C. R. C சந்திக்கு அருகில்) கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: T. மகேந்திரன் 10/1, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (68307)

### பிறிமா குஞ்சுகள்

3 நாள்கள் வளர்ந்த கொழும்பு பிறிமா Hi - Line சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. வை. சிவகுமார் (அரவிந் வீடியோ அருகில்) நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (68306)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (68155)

### இலகு திருமண சேவை

1971, பூராடம், 7 செவ்வாய் பாவமுள்ள, U. K. Computer Engineer மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. Sponser உண்டு. தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா, K. K. S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [68301]

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமற்ற 30 வயதுடைய பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆசிரியை விரும்பத்தக்கது. விள. இல. 930, மே/பா உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [68309]

### விற்பனைக்கு

அல்சேஷன் ஜேர்மன் செபேட் 2 வயது பெண் நாய்கள் இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. கண்ணதாசன் 36/23, பிரம்படி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [68317]

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 06 |
| — | — |
| 08 | 09 |
| — | — |
| 1924 | 1992 |

திருமதி தவமணி சிவகுருநாதன்

திதி: 21 - 08 - 1999 சனிக்கிழமை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். [68336]

## விளையாட்டு உத்தியோகத்தர் பரீட்சை

திருகோணமலை, ஓக, 20

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விளையாட்டு உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் நான்காம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலர் க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் சகல பரீட்சார்த்திகளுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளையில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, திருமலை, கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் மேற்படி பரீட்சை இடம்பெறவுள்ளது. (ஐ-ரி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
**றீற்றா சரஸ்வதி துரைசிங்கம்**
(ஓய்வு பெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர், மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி)

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|
| 29 10-1930 | 23-07-1999 |

எங்கள் குடும்பத் தலைவி திருமதி றீற்றா சரஸ்வதி துரைசிங்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியும் ஏனைய வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். (22—08—1999) ஞாயிற்றுற்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

கணவன் (சி. துரைசிங்கம்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

''அமலகிரி''
பெரியமாவடி வீதி,
சாவகச்சேரி. (68338)

## கேள்வி அறிவித்தல்

## பனை அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் நிர்மாண ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்யப்பட்ட தரமான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபையால் 1999 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி பகல் 10 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு 12.00 மணிக்கு கேள்விச் சபையினரால் பரிசீலனைக்கு எடுக்கப்ப . அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

வேலை விவரம்:

வேலணை தும்புத்தொற்சாலைக்கான கட்டடம் அமைத்தல். 30' X 20'

இக்கேள்விப்பத்திரத்திற்கான விண்ணப்பப்பத்திரத்தினையும், விவரத்தினையும் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 100 செலுத்தி இல. 53, கண்டி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச்சபையின் தலைமைக் காரியாலயத்தில் அல்லது பிரதேச செயலகம், வேலணைக் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்பத்திர கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் வேலணை தும்புத்தொழிற்சாலைக் கட்டடம் என எழுதப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர், தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்தில் வேலைகளைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின், நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்**
பனை அபிவிருத்திச் சபை.

பனை அபிவிருத்திச் சபை,
இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/8568)

உ

## திருமண அழைப்பு

(அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது)

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி மாதம் 5ஆம் நாள் (21-08-1999) சனிக்கிழமை கேட்டை நட்சத்திரமும் தனு லக்னமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் வரும் மாலை 2.46 மணி முதல் 4.16 மணி வரையிலான சுபமுகூர்த்த நல்வேளையில்,

திரு. திருமதி சதாசிவம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஸ்ரீகணபதி**
(ஸ்ரீ)
அவர்களுக்கும்



திரு. திருமதி ஆனந்தராஜா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சாருலதா**
(சாரு)
அவர்களுக்கும்

126, Manville Road, (Sinnott & Eglinton) Scarborough Ont. இல் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

திரு. திருமதி சதாசிவம்
குடும்பத்தினர்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

திரு. அ. ஆனந்தராஜா
குடும்பத்தினர்
''இராஜ வாசா''
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்: திருமதி இ. நாகரத்தினம்
(மாமி)
நீர்வேலி மத்தி. (65281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரி ஐந்து மாடியின் ஒருபகுதி அடுத்த மாதம் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். போதனா வைத்திய சாலையின் நிறைவு பெறாத ஐந்து மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி அடுத்த மாதம் 10 ஆம் திகதி திறந்து வைக்கப் படவுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத் தித்திட்டத்தின் உதவியுடன் கட்டடம் திருத்தும் பணிகள் மும்முரமாக மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இப் பணிக்கென அரசினால் பணம் ஒதுக்கப்பட்டும் கூட இடை யில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் இப் பணி நிறைவு பெறாமல் அப்பணம் மீளப் பெறப்பட்டமை தெரிந்ததே.

திறந்து வைக்கப்படவுள்ள இக் கட்டடத்தில் சிறுபிள்ளைகளுக்கான மற்றும் குழந்தைகளுக்கான விடுதியும், பெண் நோயாளருக்கான விடுதியும் இயங்க வைக்கப்படவுள்ளன.

இதனையடுத்து தற்போது இயங்கிவரும் வெளிநோயாளர் பிரிவு மீண்டும் ஆஸ்பத் திரியின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் முன்னைய வெளிநோயாளர் பிரிவுக்கு விரைவில் மாற்றப்படவுள்ளது.

பற்சிகிச்சைப்பிரிவு: காது, மூக்கு, தொண்டைக்கான சிகிச்சைப் பிரிவு ஆகியன தற் போது இயங்கும் இடங்களிலேயே செயற்படவுள்ளன.

விரைவில் இக் கட்டடத் தின் இரண்டாம் தளமும் புனரமைப்புச் செய்யப்பட்டு நோயாளர் பாவனைக்கெனக் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிய வந்தது.

(ஐ ரி)

## சைவபரிபாலன சபையின் சைவசமயப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். சைவபரிபாலன சபையினரால் வருடந் தோறும் நடத்தப்பட்டு வரும் சைவசமய பாடப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார். சிலாபம் ஆகிய மாவட் டங்களில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கு சுமார் 70 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர். 382 பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தரம் 2 முதல் 13 வரை யிலான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை —

கடந்த வருடம் நடத்தப் பட்ட சைவசமய பாடப் பரீட்சைக்குத் தோற்றிய 61 ஆயிரத்து 304 மாணவர் களில் 48 ஆயிரத்து 309 பேர் சித்தியடைந்துள்ளனர் என சைவபரிபாலன சபையின் பரீட்சைக்காரியதரிசி சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

(ஐ-7)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, ஓக. 20

கைதடி கிழக்கு சனசமூக நிலையமும், இந்து வாலிபர் சங்கமும், பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப்போட்டி கள் நாளை சனிக்கிழமை பி.ப. 1.00 மணிக்குநிலையத் தலைவர் சே. செல்லத்துரை தலைமையில் கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராகத் தென்ம ராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவண பவ, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே. அருணந்தி, சமாதான நீதி வான் இ. குழந்தைவடிவேலு ஆகியோரும் கலந்துகொள்வர்.

[ஐ-117]

## மொரட்டுவ பொறியியல் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

### கோட்டை ரயில் நிலையம் முன்

கொழும்பு, ஓக. 20

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்களினால் ஆர்ப் பாட்டம் ஒன்று நடத்தப் பட்டது.

பொறியியல் பீடத்துக்கு மேலும் 200 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் —

மொரட்டுவ பல்கலைக் கழகத்துக்கு வெளியே தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியை நடத்த வேண்டும் என்றும்—

தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியை மறுசீரமைக்க வேண்டும் என்றும்—கோரியே மாணவர்கள் இந்த ஆர்ப் பாட்டத்தை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர் மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

(இ-9)

## விவரம் சேகரிப்பு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சன சமூக நிலையங்களுக்கான நன்கொடை வழங்குவது தொடர்பான விவரங்கள் பெறப்படவுள்ளன.

மேற்படி பிரதேச சபைக் குட்பட்ட சன சமூக நிலையங் களின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதிநிதிகளை எதிர் வரும் 24 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிர தேச சபையில் சமுகமளிக்கு மாறு சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களான வ. கந்தசாமி, ரி. இளமுருகன் ஆகியோர் கேட்டுள்ளனர்.

(ஐ-185)

# புலவர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம் ஓக. 20

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட இளஞ்சைவப் புலவர் மற் றும் சைவப்புலவர் ஆகிய பட்டப் பரீட்சை முடிவுகள் வெளியாகி உள்ளன.

### இளஞ் சைவப்புலவர்

அ. மீனலோசினி, ப. ருத்ராதேவி, நா. நவராஜ், வே. செல்வக்குமார், கு. கிருபாகினி, ந. தயாளினி, ச. நாகேஸ்வரி, கு. அரசேஸ் வரன், ஸ்ரீ. பிருந்திரன், யோ. யோகரூபி, ரு. மாலினி அ. மனோகரன், தி. செல்வ மனோகரன், கு. லலிதா, வி. பராசக்தி ஆகியோர் இரண்டாம் பிரிவிலும் —

ந. நிஷாந்தினி, செ. ரேவதி. சு. சுபாசினி, நா. கௌசல்யா, க. கண்மணி சி. சிவாஜினி, ம. சுனித்ரா ஆகியோர் மூன்றாம் பிரிவி லும் சித்தியடைந்துள்ளனர்

### சைவப்புலவர்

நி. தசிகரன், சி. நந்த குமார், பா. தாட்சாயணி, ஆ. தங்கமயில், பூ. நகுலன், செ. சுகிர்தா, சி. விஜய கௌரி, இ. சசிகலா, ச. செபமாலைதாசன், சு. தவ ராணி, சொ. கோவிந்தர், பா. சிறீபவன், ஏ. அனு சாந்தன், பா. வசந்தகௌரி. செ. யமுனாராணி, வ. திலீபா, ந. கல்யாணி ஆகி யோர் இரண்டாம் பிரிவி லும் —

சி. விஜயராணி, செ. இரத்தினேஸ்வரி ஆகியோர் மூன்றாம் பிரிவிலும் சித்தி யடைந்துள்ளனர்.

மேற்படி பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான பெறு பேறுகள் சம்பந்தப்பட்டவர் களுக்கு தபால் மூலம்அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவப் புலவர் வ, கந்த சாமி தெரிவித்தார்.

(ஐ-7-15)

## ரீ-56 ரக துப்பாக்கி திருட்டு; பொலீஸார் இருவர் கைது

மட்டக்களப்பு, ஓக. 20

மட்டக்களப்பு அரசடி பொலீஸ் சோதனை நிலையத் தில் ரீ 56 ரக துப்பாக்கிகள் இரண்டு காணாமற்போன சம்பவம் தொடர்பாக இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி ரீ 56 ரக துப்பாக்கிகள் இரண்டும் 30 ரவைகள், இரண்டு மக ஸின்கள் என்பனவும் காணா மற் போயிருந்தன.

இது தொடர்பாக இரு வாரகாலமாக விசாரணை மேற்கொண்ட பொலீஸார் சந்தேகத்தின் பேரில் அரசடி பொலீஸ் காவல் நிலையத்தில் பணியாற்றும் நிமால் பத்ம சிறி, எம். முதியான்சலாகே அனுரா ஆகியோரைக் கைது செய்தனர்.

(ஐ-21)


## வீடு விற்பனைக்கு

3 பரப்புக் காணியுடன் நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

க. செல்வராசா
வெற்றியார் வளவு
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

(சி/8564)



## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் கோன், ரொபி வகைகள், ஐஸ்பழ தயாரிப்புக்குரிய குச்சி வகைகள், வெங்காயம் பொதி செய்யும் நெற்பேக்குகள், ஸ்ரிக்கர் படங்கள், தவிடு தேங்காய்ப், பிண்ணாக்கு, தரமான தேயிலை வகை கள், சோளன், கச்சான், தொலைபேசி வகைகள், கால் மிதிகள் என்பனவற்றை மொத்தமாக மலிவு விலை யில் பெற்றுக் கொள்ளலாம்.

**நாதன் களஞ்சியம்,**
213 C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2916

(68311)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## புதுக்கடைத் திறப்பு விழா





அன்புடையீர்,

நிகழும் பிரமாதி ஸூ ஆவணி மீ 4 ஆம் நாள்
(21-08-99) சனிக்கிழமை
முற்பகல் 07-35 – 09-06 மணிவரை வரும்
மகரலக்கின சுப முகூர்த்தத்தில்
இறைவன் அருளால்
புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

**ஈசன்**
**ஜுவல்லறி**

என்னும் நாமத்துடன்

ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
**மணி ஜுவல்லர் ஸ்தாபனத்தார்**
கனகரத்தினம் நாகரத்தினம் (மணியம்)

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 – 02 – 1947

விண்ணில் 29 – 08 – 1990

திருமதி
### இராஜேஸ்வரி கதிரவேலு
திதி: 20-08-1999 நவமி

ஆண்டுகள் ஒன்பது ஆகிவிட்ட போதிலும்
உங்கள் அன்பு நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், சகோதர
சகோதரிகள், பேரப்பிள்ளைகள்,
ஆசைப் பேர்த்தி (ஹம்சிகா), உறவினர்.

இல. 29, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை.

(68332)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஈவினை மத்தி அருள்மிகு

## ஸ்ரீ கற்பகவிநாயகர் திருக்கோயில்

புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியாரம்பம்:– பிரமாதி வருஷம் ஆவணி 5ஆம் நாள் (22-8-99) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி

எண்ணெய்க்காப்பு:– ஆவணி 7 ஆம் நாள் (24-8-99) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் மாலை 4.00மணி வரை

மகாகும்பாபிஷேகம்:– ஆவணி 8 ஆம் நாள் (25-8-99) புதன்கிழமை காலை 7.00 மணி முதல் 7.30 மணி வரை

பிரதமகுரு சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்

[ வேதாகம சோதிட பூஷணம் ]

கற்பகவிநாயகர் தேவஸ்தானம், ஈவினை.

சகலரும் வருக; விநாயகர் அருள் பெறுக!

கற்பகவிநாயகர் சைவ பரிபாலன சபையினர்.

[68282]

## தேசிய சேமிப்பு வங்கியின் விசேட கருமபீடம்

**நல்லூர் கந்தசுவாமிகோயில் வருடாந்த** மகோற்சவத்தை முன்னிட்டு வாடிக்கையாளரின் வசதி கருதி தேசிய சேமிப்பு வங்கி யாழ். கிளையின் விசேட கருமபீடம் கோயிலின் மேற்கு வீதியில் அமைந்துள்ள இந்து விடுதிக்கு முன்பாக இயங்குகிறது. தீர்த்தோற்சவம் வரையான 25 நாள்களுக்கு இயங்க இருக்கும் இக் கரும பீடத்தில்

குறைந்தது ரூபா 100 உடன்

## ரிதீரேகா

பரிசூதிய சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து இரண்டு மாதங்களுக்கொருமுறை நடைபெறும் சீட்டிழுப்பில் முதலாம் பரிசான ரூபா பதின்மூன்று இலட்சத்தைப் பணப்பரிசாகஅல்லது புத்தப்புதிய ஆடம்பரக் காராகப் பெறும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே அதிக எண்ணிக்கையில் பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்து உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள்!

**ரிதீரேகா**

கணக்கினை ஆரம்பிப்பவர்களுக்கு முருகப்பெருமானின் அழகிய மூவர்ணப்படம் இலவசமாக வழங்கப்படும்.

மேலதிக விவரங்களை கருமபீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முகாமையாளர்

தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்

(சி-8544)

## மட்டக்களப்பில் ஒருவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஓக. 20

மட்டக்களப்பு சித்தாண்டியில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கணபதிப்பிள்ளை அறிவழகன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(டு-6-21)

## கண்ணிவெடி தொடர்பான கருத்தரங்கு

நெடுந்தீவு, ஓக. 20

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை கண்ணிவெடிகள் குறித்த கருத்தரங்கு நடைபெறும்.

தீவக வலயக்கல்வி அதிகாரிகள் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

அடுத்த வாரத்தில் நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் மேற்படி கருத்தரங்கு இடம்பெறும்.

(ஐ-111)

## ருபெல்லா தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஓக, 20

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ருபெல்லாத் தடுப்பு ஊசி ஏற்றல் நிகழ்வின் இறுதி நாள் இன்றாகும்.

இந் நிகழ்வில் பல்கலைக் கழக மாணவிகள் போதனைசார், போதனைசாரா பெண் ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தின் பெண் குடும்பஅங்கத்தவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இத் தடுப்பு ஊசி ஏற்றல் பல்கலைக்கழக வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஜே. சிறீஸ்கந்தராஜா தலைமையில் பல்கலைக்கழக சுகாதார நிலையத்தில் நடைபெற்று வருகிறது. இது வரை இத் தடுப்பு ஊசி பெற்றுக் கொள்ளாதவர்கள் இந் நிகழ்வில் கலந்து பயன் பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## ஒன்பது ஆண்டுகள் ஆகியதோ?



பிறப்பு 27 – 07 – 1934

இறப்பு 20 – 08 – 1990

அமரர் **மனவல் டோமினிக்** (வாஸ்)

விழிகளில் நீர் நிறைந்து
ஒன்பது ஆண்டுகள் ஆனதையா!
எம் மனங்களில் உம்மை நினைத்து
உருகிப் போகிறோமே ஐயா!

மனைவி, மக்கள், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

இல. 41, ஒடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(68323)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 – 07 – 1965

இறப்பு 31 – 08 – 1998

திருமதி **தேன்மொழி ரதிமோகன்**

திதி: பூர்வ பக்க நவமி (20 – 08 – 99)

ஆண்டொன்று ஆனாலும் ஆறாது
அக்காவே! உன்நினைவு.
மறக்க முயல்கின்றோம் தினம்
முடியாமல் தோற்று நிற்கின்றோம்

உன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

தம்பி, அப்பா,
மகன், கணவன்,
உற்றார், உறவினர்கள்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(68303)

உ


சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி மாதம் 6 ஆம் நாள் [23-08-1999] திங்கட்கிழமை பிற்பகல் 1.55 — 2.05மணி வரையுள்ள தனுலக்கின சுப முகூர்த்த வேளையில்.

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சுரேஷ்**
அவர்கட்கும்



எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**சிவமங்கை**
அவர்கட்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு புலோலி கிழக்கு பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் பருவதவர்த்தனி அம்பாள் முன்றலில் (சிவன்கோயில்) திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு கனிந்த அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

ஆதிமூலம் ஜெயராணி தம்பதிகள்,
பூதராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

வில்லியம் சிவயோகம் தம்பதிகள்.
''யோக வாசா''
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

இரு வீட்டார் அழைப்பு

(சி/8541)

உ

தொண்டமானாறு

## ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் கோயில்

முன்றலில்

## விசேட நிகழ்வு

பருத்தித்துறை

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

வழங்கும்

**பஜனாமிர்தம்** (பக்கவாத்திய சகிதம்)

21 – 08 – 1999 சனிக்கிழமை

பிற்பகல் 3–00 மணி

**தேர்த் திருவிழா அன்று (25-08-99)**

புதன்கிழமை மாலை 6 மணி

சமய விரிவுரை :

**“வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை”**

வழங்குபவர்;

சுவாமி சித்ரூபானந்தா

செயலாளர்

**சாரதா சேவாச்சிரமம்,**

பருத்தித்துறை.

(சி/ 8550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வெற்றி தந்துள்ள அன்னாசிச்செய்கை

முயற்சி திருவினையாக்கும். குடாநாட்டில், புதிய பயிரான அன்னாசியைப் பயிரிடுவதில் வெற்றி காணப்பட்டுள்ளது. விவசாயப் பகுதி அதிகாரிகளினதும், குறிப்பாகத் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பளைப் பிரதேச அதிகாரிகளினதும், விவசாயிகளினதும் முயற்சியும் உழைப்பும் நல்ல பயன் தந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் விவசாயப் பயிர்கள் பட்டியலில் அன்னாசியும் சேர்ந்துகொண்டது. சம்பந்தப்பட்ட சகலரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

உகந்த வழிகாட்டலும் போதிய ஆதரவும், தொழில் சுதந்திரமும் இருந்தால் குடாநாட்டில் விவசாயத்துறை மேம்பட்டு பொருளாதாரத்திற்குக் கைகொடுக்கும் என்பதனைப் பளையில் மேற்கொள்ளப்பட்ட அன்னாசிச் செய்கை எடுத்துக்காட்டியுள்ளது.

முன்னர். பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் க, துரைரத்தினம் இஸ்ரேலுக்கு விஜயம் செய்த போது, யாழ்ப்பாணத்திலும் முந்திரிகைப் பயிர்செய்ய முடியும் என்று கண்டறிந்தார். அதில் மிகுந்த ஆர்வங்காட்டி முந்திரிகைப் பயிர்ச்செய்கையை இங்கு அறிமுகப்படுத்துவதில் பெரும் பங்காற்றினார். அதன் விளைவாக முந்திரிகை யாழ்ப்பாணத்தின் மிகச் சிறந்த காசுப் பயிராக மாறியது. வெளிமாவட்டங்களுக்கும் ஏற்றுமதியும் செய்யப்பட்டது.

அதே போன்று முன்னர் கொழும்பு சென்று வருவோர் 'ஆசைப்பொருளாகக்' கொண்டு வந்த லீக்ஸ், பீற்றூட், கரட், கோவா போன்ற மரக்கறி வகைகள் எல்லாம் இப்போது இங்கேயே பயிர்செய்யப்படுகின்றன. இதே நிலைமை அன்னாசிப் பயிருக்கும் ஏற்படும் என நம்பலாம்.

பளைப் பிரதேசத்தில் தென்னை மரங்களுக்குக் கீழ் ஊடு பயிராகச் செய்கை பண்ணப்பட்ட அன்னாசி நல்ல விளைச்சல் தந்திருக்கிறது. அந்தப் பிரதேசத்து மண் அதற்கு உகந்ததாக அமைந்துள்ளது. இப் பயிர்ச் செய்கையைப் பளைப் பகுதியில் விருத்தி செய்யும் வாய்ப்பு உண்டாகியுள்ளது,

குடாநாட்டின் தேங்காய்த் தேவையைத் தென்மராட்சிப் பிரதேசமே பெருமளவில் நிறைவேற்றி வருகிறது. அதிலும் பளைப் பகுதி தென்னைப் பயிர்ச்செய்கைக்கு விசேடமானது. போர் காரணமாக அப் பிரதேசத்தின் தென்னைகள் பல்லாயிரக்கணக்கில் அழிந்து போயுள்ளன. அங்கு மீள் நடுகை ஆரம்பிக்கப்பட வேண்டும். குடாநாட்டுக்கு வருடாந்தம் தேவைப்படும் இரண்டு கோடி தேங்காய்களை உற்பத்தி செய்வதற்கு 5 லட்சம் தென்னைகள் நடப்படவேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் பொருட்டு பத்து வருடங்களுக்கு ஆண்டு தோறும் 50.000 தென்னங் கன்றுகள் நடப்படவேண்டும் என்பது கணக்கு.

தென்னை மீள் நடுகை செய்யும் போது, அன்னாசி மற்றும் பப்பாசி, எலுமிச்சை, மாதுளை நிலக்கடலை ஆகியனவற்றையும் பயிரிட முடியும். இதனால் தென்னைகளும் இரட்டிப்பாகக் காய்க்குமாம்.

ஆகையால் தென்மராட்சியில் மீள் நடுகையும், அன்னாசி ஊடு பயிர்ச் செய்கையும் திட்டமிட்ட முறையில் உகந்த வழி காட்டலுடன் உரிய தொழில்நுட்பத்துடன் ஊக்குவிக்கப்படுவது அவசியம் மீள்நடுகைக்கு மானியம், நியாய விலையில் தென்னம் நாற்றுகள் மற்றும் அன்னாசித் துண்டங்கள் உதவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இது போன்ற உண்மையான (பொருளாதார) அபிவிருத்திக்குக் கைகொடுப்பதே நிறைந்த பயன் தரும்.

# நங்கையர் வாழ்வு நலம் பலபெற

# வரம் பல நல்கிடும் வரலக்ஷ்மி விரதம்

இன்று வரலக்ஷ்மி விரத நன்னாள். இந்த விரதம் புத்திர சந்தானத்தோடு சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பூவுலகில் சிறந்து வாழ்வதற்கு வழிவகுக்கும் தன்மை வாய்ந்தது.

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'' என்றார் ஔவையார். ஆகவே மானிட ஜென்மம் எடுத்த நாம் மனிதர்களாக வாழ்வதற்கு இறை ஆசி வேண்டும். இந்த விரதத்தின் மூலம் கடவுளின் கிருபையைப் பரிபூரணமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த விரத மகிமை பற்றிய ஒரு வரலாறு உண்டு.

ஒரு பொழுது உமாதேவியாரானவர் தமது ஆன்மநாயகராகிய பரமேஸ்வரனை நோக்கி, ''எந்தையே! இந்தப் புண்ணிய பூமியிலே சகல விதமான செல்வபோகங்களையும் ஐஸ்வரியங்களையும் புத்திர சந்தானத்தையும் தரக்கூடிய ஆகச் சிறந்த பெரிய விரதம் எது சுவாமி? என்று விநயத்துடன் கேட்டார்.

சிவபெருமான் அதைக் கேட்டு புன்னகை பூத்த முகத்தராகி, ''தேவி! நன்று கேட்டனை. இதோ கூறுகின்றேன் கேள்'' என்று சொல்லத் துவங்கினார்.

முன்பு ஒரு காலத்திலே குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்னும் ஒரு பெண் வசித்து வந்தாள். அவளோ மிகுந்த தெய்வபக்தியும் தூய்மையும் மிக்க ஆசாரமுள்ள பெண்ணாகக் காணப்பட்டாள். சுமங்கலிப் பெண்ணான அவள் தூயசிந்தையையுடையவள். மனத்தாலும் தீங்கு நினைக்காத மாதரசி.

ஒருநாள் அவள் கனவிலே, வரலக்ஷ்மிதேவி காட்சி கொடுத்து, தன்னை வழிபட்டு விரதமிருக்குமாறு இந்த விரதம் பற்றிக் கூறி மறைந்தாள்.

அவள் உடனே விழித்தெழுந்து தன் தோழியரை அழைத்து விவரத்தைக் கூறினாள். அதைக் கேட்ட அந்தப் பெண்களும் அவ்வாறே விரதமிருந்து சகல சம்பத்துக்களையும் பெற்றுக் கொண்டனர்.

## ஞானக் கதிர்

இடத்தை நல்ல தூய்மையாக்கி மாவிலை, தோரணமிட்டு மண்டப மையத்தில் மேடை அமைத்து நெல், அரிசி பரப்பி தாமரைக்கோலமிட்டு, அதன்மேல் ஒரு கும்பம் வைத்தல் வேண்டும்.

எல்லாப் பூசை, விரத, மங்கல காரியங்களுக்கும் தண்ணீர் நிரப்பியே கும்பம் வைப்பது வழமை. ஆனால் இந்த விரதத்துக்கு அப்படியல்ல கும்பம் நிறையப் பச்சையரிசி இடவேண்டும்.

நல்ல தூய்மையான சுழி நூலிலே மஞ்சளைப் பூசி, ஒன்பது இழையுள்ளதாக முறுக்கி, ஒன்பது முடிச்சிட்டு இந்தக் காப்பினைக் கும்பத்தின் மேல் வைத்துப் பூஜையை ஆரம்பிக்கலாம்.

முதலில் சங்கற்பம் செய்து புண்யாக வாசனம் முதலாய பூர்வாங்க பூஜைகளுடன் விசேட உபசார பூஜை, அங்க பூஜை முதலியன செய்து ஒன்பது நாமங்களால் நூலிலுள்ள ஒன்பது முடிச்சுக்களையும் பூஜித்து, அதனை வலது கையிலே கட்டிக்கொள்ளுதல் வேண்டும்.

இது ஓதும் போது முன்னே ஓங்காரத்தைச் சேர்த்தும் பின்னே நம என்றும் சேர்த்துப் பூசை செய்க இந்த விரதத்தின்போது இறைவிக்கு விசேஷமான ஒரு நைவேத்தியமாக நெய் சேர்த்த ஹவிஸ் படைப்பர் அதாவது நெய்ச்சோறு.

வரலக்ஷ்மி விரதத்துக்கு

சைவப்புலவர் **இராசையா ஸ்ரீதரன்**

பொதுவாக ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் கட்டுவதே வழக்கம். இந்த வரலக்ஷ்மி விரதத்துக்கு மாத்திரம் வலது கையிலேயே பெண்கள் காப்புக் கட்டுவர். ஏனெனில் இது பெண்களுக்குரிய ஒரு மகத்தான மகிமை வாய்ந்த விரதம் தமது மாங்கல்யம் நிலைக்க வேண்டும் அதாவது தனக்கு வாய்க்கப்பெற்ற கணவன் – க்ஷேமமாக இருக்க வேண்டுமென வேண்டி அனுஷ்டிக்கும் விரதமாகும்.

ஒன்பது முடிச்சுக்களுக்கும் ஒன்பது நாமங்கள் ஓதப்பெறும். கமலா, ரமா, லோகமாதா, விஸ்வஜனனீ, மகாலக்ஷ்மி க்ஷீராப்திதநயா, விஸ்வஸாக்ஷிணீ, சந்த்ரஸகோதரீ, ஹரிவல்லபா என்ற நாமங்களே அவை.

மிக முக்கியமானதாகத் தேவைப்படுவது அறுகு. விநாயகப் பெருமானை நினைந்து ஒரு விக்கினமும் இல்லாமல் இந்த விரதத்தை முடித்து உரியபலனை அடைய வேண்டும் என்று வேண்டிப் பூசையை ஆரம்பிக்கலாம்

அவ்வளவு கடுமையான விதிமுறைகள் இல்லாவிடினும் மத்தியானம் ஒரு வேளை போசனம் செய்து இந்த விரதத்தை நோற்கலாம்.

ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுஷ்டித்த பின்னர் நிறுத்தலாம். திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் விரதமிருக்காமல் இந்தப் பூசையை பார்த்து வழிபாடு செய்து தமக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வர். சிலர் திருவிளக்கு வழிபாடு செய்தும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பர்.

இந்த விரதம் மிகவும் பவித்திரமானது. ஆவணி மாத பூரணைக்கு முதல் வரும் வெள்ளிக்கிழமையே உகந்த நாளாகும். ★




## நலம் பெற அருள்வாய்!

நல்லையம் பதியினிலே கொலுவிருக்கும் கந்தா!
கல்லையும் கனிந்துருகச் செய்யும் இன்னருளாலே
எல்லையைக் கடந்த எம்மவர் இனிதே
தொல்லைகள் நீங்கி நலம்பெற அருள்வாய்.

கொழும்புத்துறை பகீரதன்

## அருள் பொழியும் பெருவிழா

''பார் புகழ் பூத்த நல்லை நகரில் திருவிழா
இன்பத் தமிழ் காக்கும் தெய்வத்துக்குப் பெருவிழா
முருகன் உலாவிடும் வண்ணமயில் ஏறிய திருவிழா
தங்கவேலைக் கையிலேந்திப் பவனிவரும் பெருவிழா
அடியவர் வெள்ளமென அலைமோதி ஓடிவரும் திருவிழா
பரவசத்தோடு பண்ணிசை பாடி ஆடிவரும் பெருவிழா
அழகுமிளிர் காரிகைகள் மகிழ்ந்தேத்தும் திருவிழா
சின்னஞ்சிறு சிறார்களும் உளமகிழ்ந்தேத்தும் பெருவிழா
நல்லைநகர் நாயகனை உருகிவேண்டும் திருவிழா
எம் இடர்களென்றும் தீர்ந்திடவே கந்தன் அருள் பொழியும் பெருவிழா.

நயினை விஜயன்

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 20

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் தெய்வீக கலை நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவனின் ''தமிழர் தெய்வம் முருகன்'' எனும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும்.

(ஐ–ரி–30-173)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி இளங் கலைஞர் மன்றத்தின்ஏற்பாட்டில் நலலூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை5.30மணிமுதல்மாலை 7.00மணிவரை நடைபெறும் நிகழ்வில் வாசுகி நவரத்தினத்தின் இசைக் கச்சேரி நடைபெறும். இதற்கு அணிசேர் கலைஞர்களாக சந்தான லட்சுமிஅப்புத்துரை(வயலின்) கானகோகிலம் ஜெயம் (மிருதங்கம்) ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ–ரி-30)

## வண்டில் சவாரி

அச்சுவேலி, ஓக. 20

ஆவரங்கால் சரஸ்வதி சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் சவாரித் திடலில் நடைபெறும்.

[ஐ-11[

## நீர்ப்பம்பி பழுது

வலி.தென்மேற்கு, ஓக. 20

பண்டத்தரிப்பு சந்தையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் சந்தைப்பகுதிக்கு நீர் வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தினமும் சந்தைப் பகுதியை துப்புரவு செய்வது பாதிக்கப்பட்டுள்ளது.

[ஐ-185[

உதயவாக்கு

ஆண்டவனை வழிபட்டு பணிவுடன் வாழ்ந்து தன்னலத்தை மறுத்தால் தான் நல்வழி கிடைக்கும்.

— காந்தி அடிகள்



## வறுமைப் பிணிக்கு மருந்து

இராகம் — சங்கராபரணம் தாளம் — ரூபகம்

வறுமைப் பிணிக்கு மருந்தொன்றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தனர் வாழ்ந்தார் வாழ்ந்தாரே.

— யோகர் சுவாமிகள்

## நாளை

ஆவணி 4
சனிக்கிழமை
திதி: தசமி
பின் இரவு 1-23 வரை
நட்சத்திரம்: கேட்டை
பிற்பகல் 5.12 வரை
சுபநேரம்: 3 05–4 35
ராகுகாலம்: 9 05–10 35
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

உடுவில்

ஏ. ஜெயக்குமார் [085800 ஏ], எஸ். நாகமுத்து[109645 ஏ], என். சுந்தரேஸ்[109647 ஏ], எஸ். சுகன்யன் [109647 பீ], எஸ். மதுரங்கி [109647 சீ], ஈ. சுந்தரேஸ்வரன் [109647 டீ], ஜே. பார்த்தீபன் [109648 ஏ], ஜே. மாதகி [109648 பீ], கே. சுந்தரமூர்த்தி [109649 ஏ], எஸ். அன்னபூரணம்[109649 பீ].

என். நம்பலம்[110911ஏ], பீ. ஜெயராஜ் [110911 பீ] பீ. கருணா [110911 சீ], ரீ. அருச்சுனன் [110931 ஏ], ரீ. யோகராஜ்சேகர் [110952 ஏ], ரீ. சந்ரகுமார் [099159 ஏ], காத்தனன் [108775ஏ], சுந்தரம்பிள்ளை [108775 பீ], பீ. கோபிகா [108775 சீ], பீ. பிரசன்னா [108775 டீ], பீ- நேருஸ் [108775 ஈ].

எஸ். சந்ரகலா (111741 ஏ), எஸ். வினாளன்(111741 பீ), எஸ். மாலதி (111741 சீ). கே. ராசா (111932 ஏ), ஆர். சரஸ்வதி (111932 பீ), கே. சின்னத்தம்பி (111955 ஏ), கே. இளங்கோ (112042 ஏ), என். நகுலேந்திரம் (112086ஏ), ரீ. வரதராசா (112149 ஏ), வீ. தினேஷ் (112149பீ ),

ஆர். நந்தவேலு (112831 ஏ), ஆர். சாந்தலிங்கம் (112913ஏ),எஸ். அன்னம்மா (113127ஏ).

யாழ்ப்பாணம்

ஏ. செல்வநாயகம் (080829 ஏ), எஸ். கௌரி (080829பீ), எம். நகுலேஸ்வரன் (085925 சீ), டீ. நீக்கிலஸ் (095910ஏ), ஆர். மணிவனம் (096270ஏ), பீ. சுசாந்தன் (098710ஏ), எஸ். ஜே. யசிந்தா (098710 பீ), கே. செந்துராஜ் (098824 ஏ), பீ. கந்தசாமி (098824 பீ).

ஆர். ஆர். ராஜேஸ்வரன் (100114ஏ), எஸ். பழனிவாழ்பிள்ளை (100623ஏ), பீ. சாந்தினி(100623பீ), பீ. தாரினி (100623சீ), பீ. ஆச்சான் (100623 டீ), பீ. தனுஜா (100623ஈ), டீ ஜே தர்மலிங்கம்(102409ஏ), கே. பி. ரத்னாவதி (102534பீ), ஆர். சண்முகதாசன் (102692ஏ), எஸ். தியாகராஜா (104496ஏ).

ரீ. சிவராணி (104580ஏ), ரீ. செல்வராணி (104580பீ), எஸ். சிவாமிசன் (104580சீ), ரீ. ஏ. லலிதா (104710ஏ), எம். ஐ. கில்மி (104813 ஏ), கே. மகேஸ்வரி (104891 ஏ), பீ. சிவப்பிரகாசம் (104897 ஏ), எஸ். சரஸ்வதி (104897 பீ), எஸ். வாசுகி(104897சீ), கே. சுந்தரலிங்கம்(104917ஏ),

எஸ். அருந்தன்(104917பீ), பீ. நிரஞ்சனி (107083ஏ), எம். ராஜரட்ணம்(107093ஏ), ஆர். ராமஜெய (107098ஏ), ரீ. சரஸ்வதி [107114பீ), ரீ. சசிகரன் [107114சீ]. எம். விஸ்வாநந்தன் [107138ஏ], வீ. பாலரூபன் [107138பீ), ரீ. தர்மலிங்கம்[107246 ஏ], ரீ. யோகராஜினி[107246பீ].

ரீ. காதரி [107246சீ], ரீ. பரணாவரன் [107246டீ], ரீ. கனகாம்பிகை[107246ஈ], ஜே. புஷ்பதாசன் [107261 ஏ], பீ. ரெறன்சி [107261 பீ], ஜே. எம். அருள்ராசா [107290ஏ], ஜே. டெய்சி [107290பீ], ஜே. மரியரூபராசி [107290சீ], கே. பழனிநாதன் [107291ஏ], ஜீ. மனோன்மணி [107291பீ].

ஜீ. ஜெயந்தி [107291சீ], ஆர். பாக்கியவதியம்மா ]107336பீ], ஆர். சாயிபிரதீபா [107336சீ], ஆர். பார்த்திபன் [107336டீ], பீ. பிரசாத் [107378ஏ], பீ. அமிர்தனி (107378பீ), கே. கனகராஜா (107389 ஏ), கே. புஷ்பராணி(107389 பீ), ஆர். லாசர் (107406 ஏ), வீ. கந்தசாமி (107411 ஏ),

பீ. கந்தசாமி (107411 பீ,) கே. செந்தூரன் (107411சீ), ஆர். தனதாசன் (107418 ஏ), கே. பிரலினி (107419 ஏ), வீ. வீ. டயானா (107419 பீ), எவ். பங்கிலின்ரன் (107419 சீ), வீ. கணேசலிங்கம் (107444 ஏ), பீ. ராஜேஸ்வரி (107444 பீ), பீ. தயாளினி (107444 சீ ), எஸ். ஹரிசந்திரன் (107449 ஏ).

வை. எச். ஞானபரன் (107449 பீ), எச். சஞ்சீவனி (107449 சீ). எச். ஹேமலதா (107449 டீ). ஈ. எச். செல்வநாயகம் (107480 ஏ), எவ். வீ. அந்தோனிப்பிள்ளை (107480 பீ), பீ. இம்மானுவேல் (107495 ஏ), ஏ. எஸ். செபஸ்தியான்பிள்ளை (107497 ஏ), கே. சரவணநாதன் (107516 ஏ), ஏ. எல். ஆர். செல்வராஜா (107517 ஏ). எஸ். சண்முகலிங்கம் (107522 ஏ).

எஸ். மகேஸ்வரி (107522 பீ) எஸ். நேசமலர் (107522 சீ), எஸ். கணேஸ்வரன் (107522 டீ), எஸ். புவனேஸ்வரன் (107522 ஈ). எஸ். பாலகிருஷ்ணன்(107534 ஏ , பீ. தனுஷன் (107534 பீ), பீ புரேந்தினி (109107 ஏ), பீ. நிலாந்தி (109107 பீ), பீ. சாரங்கி (109107 சீ) பீ. அனோஜன் (109107 டீ).

(ஐ-ரி)

(தொடரும்)

## தமிழர் தாயகத்தை அபகரிக்க அபிவிருத்தி என்ற கோஷமா?

### கொழும்பு நூல் வெளியீட்டு விழாவில் உரை

அபிவிருத்தி என்றபோர்வையில் காலத்திற்குக் காலம் தமிழர் பிரதேசங்கள் சிங்கள அரசுகளால் ஆக்கிரமிக்கப்பட்டன. அவ்வகையில் குரும்பசிட்டி மற்றும் வலி-வடக்குப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தத் திட்டமிடப்படுகின்றதா? எவ்வகையிலும் அதற்கு இடங்கொடுக்கலாகாது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெற்ற 'இடப்பெயர்வின் பத்தாண்டு நினைவாக நடைபெற்ற நூல் வெளியீட்டுவிழாவில் கலந்து கொணடு உரையாற்றுகையில் சட்டத்தரணி வி மகாதேவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் சுப்பையா சிவபாதத்தின் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

நடட ஈடுபெற்று மண்ணை விட்டு தொடுக்கும் நிலைக்குத் தமிழன் சென்றுவிடக் கூடாது எலிவளையானாலும் தனிவளை வேண்டும் என்று வாழ்ந்து வந்தவன் தமிழன்.

கல்லோயாத் திட்டம் அன்று ஆரம்பிக்கப்பட்ட பொழுதே இது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமே எனத் தந்தை செல்வா அன்றே கூறியிருந்தார்.

தமிழர்களைப் பகடைக் காய்களாக நினைத்துக் கடந்தகால அரசுகள் தமிழனின் முதுகில் குத்தின. அதன் பெறுபேறை இன்று நாம் அனுபவிக்கின்றோம். பொன் போன்ற நிலங்களை விட்டு விட்டு வந்து இன்று கொழும்பில் அடிமைகளாகச் சீவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இது தொடர்பாகச் சட்டத்தரணி மகாதேவா மேலும் தெரிவிக்கையில்: விநந்தோம்பும் மக்களை நாம் விட்டுப் பிரிந்து பத்தாண்டுகள் நிறைவடையப்போகின்றன. இடம்பெயர்வுகள் இரண்டு விதத்தில் இடம்பெறலாம். ஒன்று தானாக விரும்பி இன்னோர் இடத்திற்கு நகர்வது. மற்றொன்று இன்னொருவரால் வலுக்கட்டாயமாக இடம் நகர்த்தப்படுவது. இன்றைய இடம்பெயர்வுகள் வலுக்கட்டாயமாக இடம்பெறுபவை என்பது யாவரும் அறிந்ததே

இன்று பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களை அங்கிருந்து அகற்றிவிட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கு அப்பகுதி மக்கள் இடமளித்தால் கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கிய கதை போலாகிவிடும் என்றார்.

1956 ஆம் ஆண்டில் அமரர் பண்டார நாயக்கா பல்லின மக்கள் வாழும் நாட்டிற்குச் சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது எனக் கூறியிருந்தார். அதனை நிறைவேற்றும் நோக்குடன் தந்தை செல்வா செயற்பட்டபோது ஜே ஆர். ஜெயவர்த்தன போன்ற அரசியல்வாதிகள் பாதயாத்திரை சென்று அதற்கு முட்டுக்கட்டை போட்டனர்.

1972 ஆம் ஆண்டுகொண்டு வரப்பட்ட புதிய குடியரசு அரசியல் திட்டத்தில் 29 வது ஷரத்து முழுமையாக நீக்கப்பட்டது. இது தமிழ் மக்களை மேலும் அடிமை நிலைக்குத் தள்ளியது.

ஏமாற்றத்தின் உச்சக்கட்டமாக அர்ச்சனைத் தட்டுக்களுக்குப் பதிலாக இன்றைய இளைஞர்கள்எதைஎதையோ சுமக்கத் தலைப்பட்டனர். இதற்குக் காரணமே [illegible] யாளர்கள்தான்.

நாம் கொழும்பில் வாழ்வதனால் நம்மை அடிமைகள் எனத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள். நாம் மீண்டும் எமது சொந்த இடங்களுக்குத் திரும்புவோம் என்பது உறுதி என்றார்.

பேராதனைப் பல்கலைக் கழக அரசியற்துறைப் பேராசிரியர் கலாநிதி அம்பலவாணர் சிவராசா தனது உரையில்;—

எமது வரலாற்றைப் பறைசாற்ற எம்மிடம் போதியளவு சான்றேடுகள் இல்லை. உள்ள ஏடுகளும் புத்தக வடிவம் பெறவில்லை. 'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் நூலைக் கொண்டே எமது யாழ்ப்பாண வரலாற்றைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாண வரலாற்றை அறியாது குரும்பசிட்டியின் வரலாற்றை எம்மால் புரிந்துகொள்ள முடியாது.

குரும்பசிட்டியின் ஒரு பிரிவு மயிலிட்டி- மன்னராட்சிக் காலத்திலும் கூட அப் பிரதேசங்கள் காணப்பட்டிருந்தன.

முக்கிய ஆறு ஆலயங்கள் யாழ் பகுதியில் இருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு சைவர்களே ஆதிக்க நாயகர்களாக அக் காலத்தில் விளங்கியிருந்திருக்கின்றனர். பொன். பரமானந்தர் இக் கிராம வளர்ச்சிக்கு போதிய பங்களிப்புச் செய்துள்ளார் என்றார்.

சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா. பத்திரிகை ஆசிரியர்களான சிவனேசச் செல்வன், சிவகுருநாதன் உட்பட பெருமளவு கல்வியாளர் இவ் விழாவில் பங்குபற்றினர்.

பேராதனைப் பல்கலைக் கழக விவசாய பீட மாணவன் [illegible] எழுதிய [illegible] குரல்கள்' என்ற நூலின் வெளியீட்டு விழாவே நடைபெற்றது. (ஐ-ரி)

## 6 சனசமூக நிலையங்கள் சண்டிலிப்பாயில் புனரமைப்பு

வலி. தென்மேற்கு, ஒக. 20

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 6 சனசமூக நிலையங்கள் முன்பள்ளிகள் இவ் வருடம் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் பிரமாண அடிப்படையிலான நிதிகளைக் கொண்டே மேற்படி வேலைகள் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் கா. சந்திரராசா தெரிவித்தார்.

மேற்படி நிதியின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ள சனசமூக நிலையங்களின் விவரம் வருமாறு:-

★ ஆனைக்கோட்டை முன்பள்ளி பாடசாலை புனரமைப்பு - ரூபா 25 ஆயிரம்

★ கிறிஸ்துராஜா சனசமூக நிலையம் புனரமைப்பு— ரூபா 25 ஆயிரம்.

★ கலைவாணி சனசமூக நிலையம் புனரமைப்பு—ரூபா 50 ஆயிரம்.

★ ஐங்கரன் சனசமூக நிலையம் புனரமைப்பு — ரூபா 25 ஆயிரம்.

★ ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் புனரமைப்பு—ரூபா 25 ஆயிரம்.

★ மாதகல் நாவலர் சனசமூக நிலையம் புனரமைப்பு —ரூபா 35 ஆயிரம்.

மேற்படி வேலைகள் மானிப்பாய் பிரதேச சபையின் மேற்பார்வையில் செய்யப்படும்.

## சந்தை கட்டடங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக 20

சங்கானைப்பொதுச்சந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய மூன்று கட்டடங்களின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது

வட பகுதி மீள் குடியமர்வு புனர்வாழ்வுபுனரமைப்பு அதிகாரசபையின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மேற்படி கட்டடத்திறப்புவிழாவிற்கு ஈ பி டி. பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி. மேற்குப் பிரதேசசபைத் தலைவருமான ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வலி. மேற்குப்பிரதேச செயலர் மற்றும் உயர் அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

[ஐ-7]

## ஆளணி பற்றாக்குறை

வலி தென்மேற்கு, ஒக. 20

வலி தென்மேற்கு பண்டத்தரிப்பு பட்டின சபையில் ஆளணி பற்றாக்குறை நிலவுகிறது

மீளக்குடியமர்ந்த பின்னர் 40 லட்சம் ரூபா செலவில் சந்தை புனரமைக்கப்பட்ட பின்னர் பட்டின சபையின் வேலைகள் அதிகரித்துள்ளதாகவும் —

ஆனால் அதிகரித்த வேலையை மேற்கொண்டு நடத்த தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், சுகாதார பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் மற்றும் — காரியாலய காரிய சகா போன்ற பதவிகள் வெற்றிடங்களாக இருப்பதாகவும் அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

(ஐ-185)

## ஜெகோவாவின் சாட்சிகள் மாநாடு

யாழ்ப்பாணம், ஒக. 20

'கடவுளின் தீர்க்கதரிசன வார்த்தை' என்ற பொருளில் நல்லூரில் உள்ள இளங்கலைஞர் கலாமன்ற மண்டபத்தில் இன்று முதல் 3 தினங்கள் ஜெகோவாவின் சாட்சிகளுடைய மாவட்ட மாநாடு நடைபெறவுள்ளது. நிகழ்ச்சிகள் காலை 9.30 க்கு ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமை 'கடவுளின் தீர்க்க தரிசன வார்த்தைக்கு கவனம் செலுத்துங்கள்', என்ற பொருளில் சிறப்புப் பேச்சும்—

சனிக்கிழமை 'ஞானஸ்நானமும்' இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 11 10 க்கு ''ஆவிக்குரிய ஆஸ்தியை மதித்தல்' என்ற பொருளில் நாடகமும் பிற்பகல் 1.50 க்கு ''முன்னறிவித்தபடி சகலத்தையும் புதிதாக்குதல்'' என்ற பொருளில் பகிரங்க சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (ஐ)

## விளையாட்டு விழா

கோண்டாவில் ஒக 20

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க மத்திய பாலர்பாடசாலையின் 22 ஆவது வருடாந்த விளையாட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சங்க விளையாட்டரங்கில் தலைவர் சி- ஆனந்தராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ. வீ. கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினராக கோ. ம. கிழக்கு கிராமசேவையாளர் ம. தயாபரனும் பாலர் கல்விக்கழகத் தலைவர் தவகோபாலும் கலந்துகொள்வார்கள். (ஐ-ரி)

## இரு தலையுடன் நாம்பன் கன்று

தென்மராட்சி, ஒக 20

இரு தலையுடன் கூடிய கன்று ஒன்றை பசு பிரசவித்துள்ளது.

மிருசுவில் வடக்கில் உள்ள குமாரசாமி சதாசிவமூர்த்தி என்பவரின் வீட்டில் உள்ள பசுவே இரு தலையும் ஒரு உடலும் கொண்ட நாம்பன் கன்றை பிரசவித்தது. கன்று பிறந்த இரண்டு மணித்தியாலத்தில் இறந்து விட்டது. இந்த அதிசயக் கன்றினை பெருமளவு பொதுமக்கள் பார்வையிட்டனர். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவாய நம
சுன்னாகம் கிழக்கு ஊரிசாட்டி
திருப்பதியுறை

**சிவபூதராயர் ஆலய**

**வருடாந்த மஹோற்சவ விழா - 1999**

கொடியேற்றம்: 17-08-99 செவ்வாய்
தேர்த் திருவிழா: 25-08-99 புதன்
தீர்த்தத் திருவிழா: 26-08-99 வியாழன்

ஆலய பிரதம குரு
பிரம்மஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
(ஆசிரியர் யா/கைதடி குருசாமி வித்தியாலயம்
பிரதம குரு — கல்வயல் ஐயனார் ஆலயம்.)

ஆலய குரு
பிரம்மஸ்ரீ சோ. ஜெயராம சர்மா

அடியவர்கள் வருக! அருள் பெறுக!

இங்ஙனம்
ஆலய குரு பிரம்மஸ்ரீ சோ. ஜெயராம சர்மா,
மஹோற்சவ உபயகாரர்கள்

(சி/8569)


# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 20

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் 33 ஆவது வருடாந்த விளையாட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத்தலைவர் அ. சந்திரகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவர் மா. செல்வராசா கலந்து கொள்வார்.

(இ-15)

★ ★ ★

தொட்டிலடி சனசமூக நிலைய கண்ணன்பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத்தலைவர் ஆ. வ. கணேசலிங்கம் தலைமையில் பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ. பி. டி. பி. அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் கலந்துகொள்வார்.

(இ-3)

# வெடி மருந்துடன் ஆசிரியர் கைது

கொழும்பு, ஓக. 20

பத்துக் கிலோ டைனமைட் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கண்டி — கலஹிடியப் பகுதியைச் சேர்ந்த சிங்கள ஆசிரியர் ஒருவர் கண்டிப் பொலீஸாரால் கடந்த 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் இந்த வெடிமருந்துகளை அவர் திருகோணமலைக்கு எடுத்துச் செல்ல தயாராக இருந்த சமயமே கைது செய்யப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-7-8)

# ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

1996 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெற்றும் வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பிக்காத காரணத்தால் நியமனம் பெறத் தவறியவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

அதேநேரம் — தீவக வலயத்தில் நியமனம் பெறத் தகுதியானவர்களைத் தம்மைச் சந்திக்குமாறு தீவக வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(இ-3)


புத்தூர்ச் சந்தியில் புதியதோர் உதயம்

**V. I. P. TRADERS**

உதயம்: 21 – 08 – 1999 சனிக்கிழமை

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருர்கள்
அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

**வி. ஐ. பி. ரேடர்ஸ்**

கண்டி வீதி, புத்தூர்ச் சந்தி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

[சி/8565]



வடக்கு – கிழக்கு தமிழ் பிரதேசத்தில்
முதன்முதலாக
Computerised Colour Photo Printing இனை
அறிமுகப்படுத்தியவர்கள்

**Rainbow Minilab (Pte.) Ltd.**
First Photo finishers in
North - East Province

தற்போது Collecting Center ஒன்றினை
**SIVAA COMMUNICATION**
448, K.K.S. Road, Jaffna
(Hindu College Junction)
Tel No. 021 -2913
என்னும் விலாசத்தில் ஆரம்பித்துள்ளனர்.

தரமான படங்களை உங்கள் இரசனைக்கேற்ப இயலுமான அளவு விரைவாக உங்களுக்கு மிக அண்மையில் யாழ். நகரிலேயே தந்து மீண்டும் பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதைப் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

புகைப்படத்துறையின் நவீன வளர்ச்சிப் பாதையில்
சகலவிதமான சேவைகளையும் தீர்த்துக்கொள்ள
நேரடியாகவோ முகவர்கள் மூலமோ
தொடர்பு கொள்ளுங்கள்.

**RAINBOW MINILAB (PTE) LTD.**

No. 113,
Vidiyalayam Road,
Trincomalee.
Tel. No. 026 - 23078

No. 42.
1st Cross Street,
Vavuniya.
Tel./Fax 024 - 22932

Email: astral@sltnet.lk

(68339)



**புலமைப் பரிசில் 2000**

1 ஆவது பரீட்சையில்
அதிகூடிய புள்ளி பெற்றோர்

1) ம. நிலானி
யா/ ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்
2) சே. மதுரிகா
யா/ இந்து ம. ஆ பா.
3) ம. ரம்யா
யா/ இ. ஆ. பா.
4) வா. சுகன்யா
யா/ திருநெல்வேலி த. க. பா.

அடுத்த பரீட்சை:
22 – 08 – 99

BOND யாழ் நகர்.

(68343)


# நன்றி நவிலல்

யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் பதவியிலிருந்து 13. 08. 1999 இல் ஓய்வு பெற்ற திருமதி தவமணி பரமானந்தர் ஆகிய எனக்கு 15. 08. 1999 இல் சேவை நலன் பாராட்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்திய பா. அ. சபையினருக்கும் ப. மா. சங்க ஆசிரியர்கள் மாணவர்கள் கிராம சேவையாளர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் ஒத்தாசை புரிந்தோருக்கும் சேவலப்பிட்டிக் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்கள் குடும்பத்தினருக்கும் மேலும் கௌரவித்தோருக்கும் பாராட்டுரைகள் ஆசியுரைகள் வழங்கிக் கௌரவித்த தென்மராட்சி பிரதேசச் செயலர், வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் முதலியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி தவமணி பரமானந்தர்
குடும்பம்

(சி/8575)


**புத்தாயிரமாண்டு இன்னிசை அருவி**

**MILLENNIUM MUSICAL SHOW**

MILLENNIUM MUSICAL SHOW

மருத்துவ பீட மாணவர்களால் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியின் நிதியானது பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுததப்பட உள்ளது.

1. மருத்துவ பீட மாணவர்களிற்கான புத்தக மற்றும் ஏனைய தேவைகளிற்கான நித்யுதவி.
2. யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒரு C T Scan (மூளை படம் பிடிக்கும் கருவி) வருகிறது. அதற்கான பராமரிப்பு நிதி உதவி.
3. யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு நிதி உதவி.
4. யாழ். மருத்துவபீட 20-ம் வருட கொண்டாட்ட நிதியுதவி.
5. அனாதைச் சிறுவர்களிற்கான நிதி உதவி,

உங்களின் அன்பளிப்பு: 1000/- 750/-

இடம்: கைலாசபதி கலையரங்கம்

காலம்: செப்ரெம்பர் 9, 10, 11, 12
மாலை 2.00 மணி முதல் 5.00 மணி வரை

**குலம் கிறீம் ஹவுஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8576)



உரும்பராய்
**லயன்ஸ் கழகம்**
**மருத்துவ முகாம்**
(கலைவாணி சனசமூக நிலைய ஆதரவில்)

இடம்: கணேசா வித்தியாலயம் ஊரெழு.
காலம்: 22-08-1999 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30 மணி

லயன் S. M. பெர்னான்டோ M. J. F.
அவர்களால் கண்பரிசோதனை நடைபெறும்.

லயன் டாக்டர் C. இந்திரராசா தலைமையிலும் மற்றும் பிரபல டாக்டர்களாலும் மருத்துவபீட மாணவர்களாலும் இந்த முகாம் நடத்தப்படும். அத்துடன் அனர்த்தங்களால் சேதமடைந்த கணேசா வித்தியாலயக் கட்டடம் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கும் வைபவமும் இடம்பெறும்.

இலவச மூக்குக் கண்ணாடி பெற விரும்புபவர்கள் தத்தமது பகுதி கிராமசேவை உத்தியோகத்தரினால் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்கள் என்ற சிபார்சு கடிதத்துடன் வருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

A. C. T, கிருஷ்ணராசா — காரியதரிசி
இ, நடராசா — தலைவர்

(68342)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரமாக குடியமர்த்துக அல்லது நிவாரணம் வழங்குக

## வலி-வடக்கு புனர்வாழ்வுச் சங்கம் மகஜர்

வலி. வடக்கு ஓக. 20

வலி- வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வருடக்கணக்காக அலையும் மக்களை மீண்டும் அப்பகுதியில் நிரந்தரமாக குடியமர அனுமதிக்க வேண்டும். இல்லையாயின் அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாவது வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

அம் மகஜரின் தெரிவிக்கப்பட்ட ஏனைய அம்சங்கள் பின்வருமாறு:

சுமார் 68 ஆயிரம் மக்கள் வசதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்ந்த பூமி வலி வலி-வடக்குப் பகுதி. சிறந்த விசாய நிலங்கள் மீன் பிடித்தொழிலை மேற்கொள்வதற்கான கடற்கரையையும் அதனைச் சார்ந்த பயன்தருமரங்களைகொண்ட நிலப்பகுதி அது.

உயர்தர வகுப்புக்களை உள்ளடக்கிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி, உட்பட பிரபல்யமான பாடசாலைகள் சிறப்பாக செயற்பட்டு வந்ததனையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

கைத்தொழில் வளத்தைப் பொறுத்த வரையிய் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, கம்பி ஆணித் தொழிற்சாலைகள் என்பன இப் பகுதியில் சிறப்பாக இயங்கி வந்ததும். தற்பொழுது அவை முடங்கி கிடப்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம்-

இது சமய, கத்தோலிக்க மதத்தை சேர்ந்த கோயில்கள் குறிப்பாக மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், மயிலிட்டி புனித மரியாள் கோயில் மற்றும் வசாவிளான் தோலகட்டி செபமாலை ஆச்சிரமம் போன்றன இப் பகுதியில் பக்தி அலையைப் பரப்பி வந்தன. ஆனால் இன்று அவை காடு மண்டிய பகுதியாக அலங்கோலமாக காட்சியளிப்பது வேதனைக்குரியது.

அது மட்டுமன்றி கீரிமலை நீரூற்றுப் பகுதி புனித பிரதேச மாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல அமைப்புக்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது ஆனால் இன்று வரை அது செயல் வடிவம் பெறவில்லை.

இடைக்கால நிவாரணத்தை பொறுத்தவரையில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப் படல் வேண்டும்.

★ 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு மாதாந்த வாடகை வழங்கல்.

★ தமது வீட்டு வளவில் கிடைக்கும் வருமானத்திற்குப் பதிலாக மாதாந்த பண உதவி வழங்கல்.

★ விவசாய கைத்தொழில் உற்பத்தி நிலையங்களை வலி. வடக்கில் மீளமைத்தல்.

★ மீளக்குடியமர்ந்த பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கல்.

★ மீளக்குடியமர்த்தல் கொடுப்பனவுகளை முன்னுரிமை அடிப்படையில் வழங்கல்.

சேதமடைந்த அரசு, தனியார் கட்டடங்களை அரச அலுவலர்கள் பார்வையிட்டு நட்டஈடு வழங்கலை துரிதப்படுத்தல். [ஐ- 86]

---

### பிரயாணடமான...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தனர்,

ஊர்வலத்தில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக ஆயிரத்துக்கு மேற்பட்ட போக்குவரத்துப் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்படுவர். கொழும்பில் ஊடுருவி உள்ளனர் என்று கருதப்படும் புலிகள் ஊர்வலத்தை இலக்கு வைக்கலாம் என்று கிடைத்துள்ள தகவலை அடுத்து பாதுகாபபும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்வலம் முடிவில் ஹவ்லக் மைதானத்தில் நடைபெறும் மாபெரும் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றுவார்.

அடுத்த பத்தாண்டில் மேற்கொள்ளவிருக்கும் புரட்சிகர மாற்றங்கள் தொடர்பாக முக்கிய அறிவிப்புக்களை அவர் விடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — ஐந்தாண்டுப் பூர்த்தியை ஒட்டி அரச சார்புத்தொழிற்சங்கங்கள் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தின (இ-3-6)

---


புதிய வீடியோ CD
வெளியீடு!
நெப்போலியன் —சுவலட்சுமி
நடித்த
★ பொன் விழா
பிரதிகள் 3 மணிக்குப் பின்
வழங்கப்படும்.
விஷ்ணு வீடியோ
K K S. ROAD,
கோண்டாவில்.
(68346)



A/L 2000
பொருளியல் மாணவர்களே!
பகுதி II
பணம், வங்கி
ஆரம்பம்: 21-08-99
சனி காலை 7·00 மணி.
ஆசிரியர்:
திரு. S. ஜெயகுமார்
SUBRA
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி.
(68344)


## சமய சந்நிதிகளில்

உரும்பிராய், ஓக. 20

அம்மன் ஆலயங்களில் இன்று வரலக்குமி தினமாகும். இதனை முன்னிட்டு இன்று விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். வீடுகளிலும் பெண்கள் ஆராதனைகள் நடத்துவர்.

இந்து சமயக் கோட்பாடுகளின் படி வரலக்குமி செல்வத்தை வழங்குபவள்ஆவாள். இதனால் இத் தினத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. (ஐ-154)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 20

நவாலி ஞான வைரவ சுவாமி திருக்கோயில் ஆவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வை ஒட்டிய கிரியைகள் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5. 30 மணிக்கு விநாயகர் வழி பாட்டுடன் ஆரம்பமாகும். (ரி-ஐ)

★ ★ ★

கச்சேரி நல்லூர் அருள்மிகு ஸ்ரீதேவி பூமிதேவி சமேத மகா விஷ்ணு பெருமாள் கோயிலில் இன்று காலை 10. 30 மணிக்கு அபிஷேகம் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து திருவிளக்கு பூசையும் சுமங்கலிப் பூசையும் இடம்பெறும். (இ-15)


எமது புதிய
ஒறிஜினல் வீடியோ
CD வெளியீடு!
நெப்போலியன்– சுவலட்சுமி
நடித்த
பொன் விழா
பிரதிகளை உடன்
பெற்றுக்கொள்ளலாம்.
சுப்பஸோ
வீடியோ
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/8577)


---

### பட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)

அதற்காக அவருக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாகவும்—அவர்மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக தாம் லண்டனில் உள்ள பொதுசன தொடர்பு நிலையத்தில் ஆலோசனை கேட்டிருந்ததாகவும் —

அந்த நிறுவனம் தமக்கு அனுப்பிய ஈமெயில் ஒன்றையே அதி தொழில் நுட்பம் வாய்ந்த கருவிகள் மூலம் அமைச்சர் பட்டி வீரக்கோன் இடைமறித்துப் பெற்றுக் கொண்டதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (இ-3-6-7)

---

### பல்கலைக்கழகத்தில்,..

(முதலாம் பக்கத் தொடர்)

குரிய ஜெபமோகன் அடிகளார் தலைமையில் கிறிஸ்தவ சமயப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

இன்றைய பிரார்த்தனையில் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

---

### படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்கு நாம் பாதுகாப்பு வழங்குவோம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனும் இந்த விடயத்தை மறு பரிசீலனை செய்யுமாறு அரசிடம் கோரியுள்ளார். (இ-3)

---

### குண்டுகளைக்...

[முதலாம் பக்கத் தொடர்]

இந்தக் குழு மக்கள் கூடும் இடங்களில் மக்களோடு மக்களாக இணைந்து தகவல்களைச் சேகரிப்பதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பு நகரில் அதிகரித்து வரும் குண்டுத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் திட்டத்தின்படி இந்த [illegible] வது. (இ-3)

---

## திட்டமிடல் சேவை; 3 தமிழருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஓக. 20

இலங்கைத் திட்டமிடல் சேவையின் முதல் வகுப்பில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள 33 பேரில் மூவர் தமிழர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் செவ்வந்தி நாதக் குருக்கள் சுவாமிநாதன், முன்னாள் கிளிநொச்சி அரச அதிபர் ரி. இராசநாயகம், யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவுப் பணிப்பாளர் சி. மகாலிங்கம் ஆகியோரே பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

வவுனியா திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் சுவாமிநாதன் வடக்கு — கிழக்கு மாகாண சபைத் திட்டமிடல் பணிப்பாளராகப் பதவி ஏற்கவிருக்கின்றார். (இ-3)

## பயிற்சியில் ஈடுபட்ட மாணவன் மயங்கி வீழ்ந்து மரணம்

### நாவற்குழியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 20

பாடசாலை விளையாட்டு மைதானத்தில்நேற்றுக்காலை உதைபந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவன் ஒருவர் மயக்கமடைந்து வீழ்ந்து மரணமானார்.

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. (சாதாரண) வகுப்பில் கல்வி பயிலும்இதே இடத்தைச்சேர்ந்த குலேந்திரன் மேகலன் (வயது 16) என்ற மாணவனே மரணமானவராவார்.

இவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பொருட்டு நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (இ-5ரீ-15)

### வவுனியாவில் பாதுகாப்புக் கருதி

## படை முகாம்களுக்குள் மின்மாற்றிகள் நிறுவப்படும்

வவுனியா, ஓக. 20

வவுனியாப்பகுதியில்தொடரும் மின்மாற்றிகள் தகர்ப்பதையடுத்து பாதுகாப்பு அற்ற இடங்களிலுள்ள மின்மாற்றிகளையும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இராணுவ முகாம்களில் வைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டதாக மின்சார சபையின் உயர்அதிகாரி சி. சபாரத்தினம் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் மின்மாற்றிகள் தகர்ப்புச் சம்பவத்தையடுத்து படையினருக்கும், மின்சார சபை உயர் அதிகாரிகளுக்கும் இடையில் வவுனியாவில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அச்சந்திப்பில் சகல மின்மாற்றிகளுக்கும் பாதுகாப்பு வழங்கல் சாத்தியமல்ல என படைத்தரப்பு தெளிவாக தெரிவித்துவிட்டது என்றார்.

இதனையடுத்தே மேற்கண்ட நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முடிவையடுத்து வவுனியாப் பகுதி இருளில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி)

## சாரணருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

உயர்தரு சின்னப் பயிற்சியில் கலந்து கொள்வதற்கெனக் கொழும்பு செல்வதற்காகச் சாவகச்சேரி, தென்மராட்சி மாவட்டத்தினூடாக பதிவு செய்த மாணவர்களை பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 9 மணிக்கு யாழ். ரயில் நிலைபத்தில் ஒன்றுகூடுமாறு சாரண மாவட்ட ஆணையாளர் எம். புவனேந்திரன் கேட்டுள்ளார். (இ-7)

---

### வவுனியாவின் ...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒன்று நடைபெறவிருக்கின்றது.

இதில் வவுனியா அரச அதிபர், மின்சாரசபை அதிகாரிகள் பங்குபற்றுவர். (இ-3)

---

### வெறும்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

அந்தப் பகுதியில் மரம் ஒன்றைத் தறிப்பதற்காக மரத்தின் அடிப்பாகம் அகழப்பட்டதாகவும்—

அச்சமயம் இவை கண்டு பிடிக்கப்பட்டிருக்கலாம் என்றும்—அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (இ-3-86)

---

### ஈழத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

களை உறுதி செய்யும் வகையில் ம. தி. மு. க. ஈடுபடும் எனவும் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கசிப்பு விற்பனை தண்டனை விதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

கசிப்பு விற்பனைசெய்ததாக பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்யப்பட்ட இருவருக்கு3 ஆயிரத்து 750 ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த செல்லையா குணபாலசிங்கம், புலேந்திரன் அசம்ரீனா ஆகியோரேகசிப்பு விற்பனை செய்ததாக கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதேவேளை கசிப்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட கோண்டாவிலைச் சேர்ந்த வை. செல்வராசாவுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும்—

செலுத்தத் தவறினால் 6 மாத சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது (இ-5-ரி)

---

### ஹட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் காலை 10-30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதன் காரணமாக ஹட்டன் நகரப்பகுதிக்கான மின்சார விநியோகம் சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

மேற்படி குண்டு வெடிப்பினால் மின்சார சபைக்கு சுமார் ஐந்தரைஇலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7-8)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 20-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org